முக்கிய வார்த்தைகள்:
'இபாதுர் ரஹ்மான்
பணிவு
பொறுமை



இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)
வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்
27 நவம்பர் 2026 / 17 ஜமாதில் ஆகிர் ஹிஜிரி 1448

மென்மையானத் தன்மை தான், மோதலுக்கான சரியானத் தீர்வு

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَى فِي التَّنْزِيلِ: يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ ٱتَّقُواْ ٱللَّهَ حَقَّ تُقَاتِهِۦ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ.

ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!] அளவற்ற அருளாளனாகிய அல்லாஹ்வின் அடியார்களாகிய நாம், அவனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலமும், அவனால் தடுக்கப்பட் டவைகளைத் தவிர்ப்பதன் மூலமும் அவனது கருணையைப் போற்றி, மதிப்போமாக! எல்லாம் வல்ல அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலா, எவர்களின் ஈமான் எனும் ஓரிறை நம்பிக்கை உறுதியாகவும் அசைக்க முடியாததாகவும் நிலைத்திருக்கிறதோ அப்படிப்பட்ட தனது நல்லடியார்களில் ஒருவராக நம்மை ஆக்குவானாக! ஆமீன், யா ரப்பல் ஆலமீன்.

என் அன்புச் சகோதரர்களே!

இன்று முதல் இந்த ஆண்டின் இறுதி வரை, வெள்ளிக்கிழமை பிரசங்கத்தில் **'இபாதுர்-ரஹ்மான்'** [அல்லாஹ்வுடைய அடியார்களின்] பண்புகளை மையமாகக் கொண்ட தொடர்ச்சியான ததப்புர் (சிந்தனை) "குத்பா" பிரசங்கங்கள் இடம் பெறும். இன்ஷாஅல்லாஹ்.

என் சகோதரர்களே! அல்லாஹ் (சுப்ஹானஹு வதஆலா) தன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களில் ஒரு கூட்டத்தினருக்கு **'இபாதுர்-ரஹ்மான்'** (அளவற்ற அருளாளனின் அடியார்கள்) என்ற பட்டத்தை வழங்குகிறான். அந்த நல்லடியார்கள் நமக்கு ஓரிறை நம்பிக்கையின் உத்வேகம் அளிக்க வேண்டும் என்பதற்காகவும், நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து அவர்களைப் பின்பற்ற முயல வேண்டும் என்பதற்காகவும், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா அவர்களின் பண்புகளையும் குணாதிசயங்களையும் விவரிக்கிறான்.

இந்தப் பிரசங்கங்களின் தொடரில் முதல் வசனமாக, திருக்குர்ஆனின் "அல்ஃபுர்கான்" எனும் அத்தியாயத்தின் பின்வரும் 63-வது வசனத்தை எடுத்துக் கொள்ளலாம்; அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா கூறுகிறான்:

وَعِبَادُ ٱلرَّحۡمَٰنِ ٱلَّذِينَ يَمۡشُونَ عَلَى ٱلۡأَرۡضِ هَوۡنٗا وَإِذَا خَاطَبَهُمُ ٱلۡجَٰهِلُونَ قَالُواْ سَلَٰمٗا ٦٣

பொருள்: *"இன்னும் 'இபாதுர் ரஹ்மான் [அல்லாஹ்வுடைய அடியார்கள்] [யாரென்றால்] அவர்கள்தாம் பூமியில் **பணிவுடன்** நடப்பவர்கள்; மூடர்கள் [விரும்பத்தகாத வார்த்தைகளைக் கொண்டு] அவர்களுடன் பேச முற்பட்டால் "ஸலாம்" [சாந்தி உண்டாகட்டும் என்று] கூறி [விலகிப் போய்] விடுவார்கள்"*

அன்பான ஜமாஅத்தார்களே! அல்லாஹ் ஏன் அந்த நல்லடியார்கள் நடந்து கொள்ளும் விதத்தில் கவனம் செலுத்துகிறான்? என்பதில் நாம் சிந்திக்க வேண்டும்.

ஒருவேளை, '**இபாதுர்-ரஹ்மான்** (அல்லாஹ்வின் அடியார்கள்), அற்பமான அன்றாடச் செயல்கள் அல்லது சிறியதாகக் கருதப்படும் காரியங்கள் மூலமாகக்கூட, தொடர்ந்து அல்லாஹ்வின் திருப்தியைத் தேடுகிறார்கள் என்பதையும், ஒருவர் நடக்கும் விதமே இதற்கு மிகத் தெளிவான எடுத்துக்காட்டுகளில் ஒன்றாகும் என்பதையும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்குக் கற்பிக்க விரும்புகிறான் போல் தெரிகிறது.

அடுத்த கேள்வி யாதெனில், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் வகையில் ஒருவர் எவ்வாறு நடப்பது? என்பதாகும். அதற்கான பதில், மேற்கண்ட வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த நல்லடியார்களின் முதல் பண்பான **பணிவு** என்பதில் அடங்கியுள்ளது. மீண்டும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்; **பணிவு** இல்லாமல் சத்தியத்தை அடியோடு நிராகரித்தவர்களைப் பற்றிய வரலாறுகள் ஏராளமாக உள்ளன.

இறைத்தூதர்[ஸல்] அவர்களின் காலத்தில் மக்காவில் வாழ்ந்த அபூ ஜஹ்ல் என்பவர், ரசூலுல்லாஹி [ஸல்] அவர்களின் இறை அழைப்பை நிராகரித்ததானது, அவருக்கு உண்மை தெரியாததினால் அல்ல; மாறாக, அவருடைய ஆணவமும் அவரது அந்தஸ்தின் மீதான பிரியமும். இறைத்தூதர் [ஸல்] அவர்களுக்கு முன்னால் தன்னைத் தாழ்த்திக் கொள்வதைத் தடுத்ததினாலேயே ஆகும்.

அவ்வாறே, இப்லீஸ் தன்னை மிகவும் மேன்மையானவனாகக் கருதியதால்தான், இறைத்தூதர் ஆதம் (அலை) அவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக அவர்களுக்குச் சிரம் பணிய மறுத்தான்.

அன்பான ஜமாஅத்தார்களே!

பின்னர், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா **'இபாதுர்-ரஹ்மான்'** [அல்லாஹ்வின் அடியார்களின்] இரண்டாவது பண்பைக் குறிப்பிடுகிறான்; அதுதான், *மூடர்கள் [விரும்பத்தகாத வார்த்தைகளைக் கொண்டு] அவர்களுடன் பேச முற்பட்டால் "ஸலாம்" [சாந்தி உண்டாகட்டும் என்று] கூறி, அவர்கள் [விலகிப் போய்] விடுவார்கள்" என்பதாகும்.*

அல்லாஹ்வின் இந்தப் பூமியில் நாம் நடக்கும்போது நிச்சயமாக நிகழவிருக்கும் ஒரு விஷயத்தைப் பற்றி அல்லாஹ் நமக்கு அறிவிப்பதை இங்கு நாம் கவனிக்க வேண்டும்: நாம் எல்லா விதமான மக்களையும் சந்திப்போம். இயல்பாகவே, எல்லோரும் பொதுவெளியில் நல்ல முறையில் நடந்துகொள்வார்கள் எனக் கூற முடியாது. எனவே, நாம் எப்படி எதிர்வினையாற்றுவது? நாம் **பணிவுடன்** நடந்துகொண்டு, அதே நேரத்தில் தீமைக்கு அதே விதத்தில் பதிலடி கொடுப்பது சரியா? என்றால், நிச்சயமாக இல்லை!

அதனால்தான், எதிர்மறையான விஷயங்களை நாம் எதிர்கொள்ளும் போது, சூழ்நிலையை அமைதிப்படுத்தும் விதத்தில் பதிலளிக்குமாறு அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நம்மை வலியுறுத்துகிறான்.

அன்பான ஜமாஅத்தார்களே! அல்லாஹ்வின் இந்தச் செய்தி உண்மையில் ஒரு நல்ல எதிர்வினையை விட மேலான கருத்தை நமக்குத் தெரிவிக்கின்றது. அதாவது, தவறான காரியங்களுக்கு நல்ல எதிர்வினை ஆற்றுவதற்கு, சிந்தனை முதிர்ச்சி, ஞானம், **பொறுமை** மற்றும் ஒருவரின் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் திறன் ஆகியவை தேவைப்படுகின்றன. இது ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள

சவாலாகும். ஒருவேளை, இதனால்தான் இச்சிறப்பானத் தன்மைகளைக் கொண்ட **'இபாதுர்-ரஹ்மான்'** அல்லாஹ்வின் பார்வையில் மிகவும் சிறப்பு வாய்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள் போல் தெரிகிறது.

சகோதரர்களே! அகங்காரம் எனும் தன்மையானது, பெரும்பாலும் தீமைக்குத் தீமையைக் கொண்டே பதிலடி கொடுக்க மக்களைத் தூண்டுகிறது. ஆனால், "**இபாதுர்-ரஹ்மான்**" களின் **பொறுமை,** வாழ்க்கையின் சோதனைகளை எதிர்கொள்ள அவர்களுக்கு உதவுகிறது; அதே சமயம், அவர்களிடம் காணப்படும் ஞானம் ஒரு சூழ்நிலையை மிகவும் கவனமாக மதிப்பிட அவர்களுக்கு உதவுகிறது.

'இபாதுர்-ரஹ்மான் என்பவர்கள் தங்களின் கருத்திலோ அல்லது குணத்திலோ வேறுபடுபவர்களைத் தோற்கடிக்கப்பட வேண்டிய எதிரிகளாகக் கருதுவதில்லை. அகந்தையின் கோரிக்கைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, பதற்றத்தைத் தணிக்கும் ஒரு பதிலை அளிப்பதே அவர்களுக்குப் போதுமானது. இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் பின்வரும் வழிகாட்டுதலை நினைவில் கொள்ளுங்கள், அதன் பொருள்:

மல்யுத்ததில் வெற்றி பெறுபவர்கள் வலிமையானவர்கள் அல்ல. மாறாக, கோபம் வரும்போது தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்பவர்களே வலிமையானவர்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி மற்றும் முஸ்லிம் ரஹ்)

மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே!

மகத்துவமும் கண்ணியமும் அல்லாஹ்வுக்கே உரியது என்றும், நாம் அவனுடைய சிறிய அடியார்களே என்றும் உணர்வதிலிருந்தே **பணிவு** பிறக்கிறது.

வாழ்க்கை என்பது, நமது சக்திக்கும் அறிவுக்கும் அப்பாற்பட்டதாகும். ஏக இறைவனாகிய அல்லாஹ்வின் விருப்பப்படியே நமக்கு வாழ்வாதாரங்கள் கிடைக்கின்றன. நம்மிடம் உள்ள அனைத்து அருள்களும் அல்லாஹ்விடமிருந்து நமக்கு வழங்கப்பட்டுள்ள வெறும் கடனைத் தவிர வேறொன்றுமில்லை என்ற நிலையில், நாம் எப்படி நம்மை உயர்ந்தவர்களாக உணர முடியும்? அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அந்-நஹ்ல்" எனும் அத்தியாயத்தின் பின்வரும் 53-வது வசனத்தில் நமக்கு நினைவூட்டு கிறான், அதன் பொருள்: *"உங்களிடம் எந்த அருட்கொடை காணப்பட்டாலும் அவை யாவும் அல்லாஹ்விடமிருந்தே உங்களுக்குக் கிடைத்ததாகும்"*

ஆகவே, இதற்கு முன்பு ஓதப்பட்ட வசனங்களைச் சிந்திப்பதன் மூலம் நம்மிடம் ஏற்படும் **பணிவையும் பொறுமையையும்** நாம் வெளிப்படுத்துவோமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, தான் விரும்புகின்ற **'இபாதுர்-ரஹ்மான்** (அல்லாஹ்வின் அடியார்கள்) என்பவர்களில் நம்மை ஆக்குவானாக. அவர்கள் நம்முடன் இருப்பதானது அமைதியைக் கொண்டு வருகிறது, மேலும் அவர்களின் குணம் அளவற்ற அருளாளனாகிய அல்லாஹ்வின் கருணையைப் பிரதிபலிக்கிறது. ஆமீன், யா ரப்பல் ஆலமீன்.

أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.

இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اْلمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ

عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.